5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகக் காவல் தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடைகோடியில் இருக்கும் என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கி, அதற்கு மேலாக பொது நிறுவனங்கள் குழுவிலே 4 ஆண்டுக்காலம் பணியாற்ற வாய்ப்புக் கொடுத்து, அதிலே 2 ஆண்டுகள் தலைவர் பதவியும் கொடுத்து என்னை கௌரவித்தமைக்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, 1995–96ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 266 முதல் 268 வரையிலான 3 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன். நன்றி, வணக்கம்.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. ஆர். சிங்காரம், அரசு உறுதி மொழிக் குழுவின் தலைவர்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவராகிய நான் பத்தாவது சட்டமன்றப் பேரவையின் அரசு உறுதிமொழிக் குழுவின் 1995–96ஆம் ஆண்டிற்கான 31–வது அறிக்கையைப் போதிய கால அவகாசம் இல்லாததால், அச்சிடப்படாத அறிக்கையாகப் பேரவைக்கு அளிக்கிறேன். இவ்வறிக்கையின் நகல்கள் உறுப்பினர்கள் பார்வைக்காக நூலகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன.

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. வே. கண்ணன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

திரு. வே. கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1995–96ஆம் ஆண்டுக்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 73 முதல் 76 வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) கடல் சார் வாரியச் சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன் வடிவுகள் (அறிமுகம் செய்தல்), 1995–ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல் சார் வாரியச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995–ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல் சார் வாரியச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.